**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

S.C. 32/2023 தேதி 24-04-2025

அ.சா 3 – மல்லையா

**மனுவின் பேரில் அ.சா 3 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் குணம் மருத்துவமனையில் விசாரித்தார்கள். 11.07.2021 ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டும் போலிசார் விசாரிக்கவில்லை. அ.சா 1 நிலம் வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் , என் அண்ணன் சொல்லி தெரியும் என்கிறார். என் அண்ணன் நிலம் வாங்கிய பிறகு எதிரிகள் பிரச்சனை செய்தது சம்மந்தமாக ஏதாவது வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. போலிசார் விசாரிக்கும் போது எனக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் நிலத்திற்கு அருகில் நிலம் இருப்பதாகவோ அங்கு நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுரேஷ்பாபு கடப்பாரையால் என் அண்ணனை வயிற்றில் குத்தினார் என்றும் , அவர் அதனை பிடித்து கொண்டார் என்றும் நான் ஓடிச் சென்று கடப்பாரையை பிடித்து கொண்டேன் என்றும் , போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது சத்தம் கேட்டு 10 பேர்கள் வந்தார்கள் அவர்கள் பெயர்கள் , சொல்ல முடியுமா என்றால் முடியும் , அவர்கள் பெயர் வெங்கடேஷப்பா, ராஜப்பா, ஹரிஷ் , பாலாஜி, கிரண், மற்றும் சிலர் வந்திருந்தார்கள் பெயர் ஞாபகம் இல்லை என்கிறார். மேற்படி நபர்களின் பெயர்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை என்பதால் சொல்லவில்லை என்கிறார்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வடக்கு பக்கம் அப்பையப்பா நெட் ஹவுஸ் உள்ளது என்றால் சரிதான். அதில் ஆட்கள் வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அ.சா 2 க்கு இரத்தக்காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். அவர் அணிந்திருந்த துணிகளில் இரத்தம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். அதை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் தெரியாது என்கிறார். நான் சொல்வது போல் சம்பவம்

எதுவும் நடைபெறவில்லை எனவும் நான் சொல்வது போல் அ,சா 1,2 க்கு காயம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அண்ணனுக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

S.C. 32/2023 தேதி 24-04-2025

அ.சா 2 – சசிதர்

**மனுவின் பேரில் அ.சா 2 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. கடந்த 11.07.2021 ம் தேதி அ.சா 1 ஆன என் பெரியப்பா உடன் நான் டிராக்டரில் செல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் 20 அடி தூரத்தில் நானும் எனது சித்தப்பாவும் நிலத்தில் தண்ணீர் காட்டிக்கொண்டிருந்தோம் என்கிறார். 11.07.2021 ம் தேதி விஜய் மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். 3, 4 நாள்கள் கழித்து குணம் மருத்துவமனையிலும் போலிசார் என்னை விசாரித்தார்கள். குணம் மருத்துவமனையில் நான் சிகிச்கை எடுத்துக்கொண்டேனா என்றால் ஆமாம் , எலும்பு முறிவுக்கு அறுவை சிகிச்கை அந்த மருத்துவமனையில் தான் செய்யப்பட்டது. எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை குணம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் 11.07.2021 ம் தேதி மாவு கட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன் என்றும் பின்பு 3, 4 நாள்கள் கழித்து பணம் தயார் செய்து கொண்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டேன் என்றும் சாட்சி சொல்கிறார்.

2. அறுவை சிகிச்சை செய்து 2 நாள்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விஜய் மருத்துவமனையிலும் குணம் மருத்துவமனையிலும் நான் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. X RAY , ஸ்கேன் ரிப்போர்டை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். நான் குணம் மருத்துவமனையில் 1 நாள் புறநோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்ட விவரத்தையும் , 3, 4 நாள்கள் கழித்து பணம் தயார் செய்து கொண்டு வந்து அறுவை சிகிச்சை செய்து கொண்ட விவரத்தையும் போலிசார் விசாரிக்கும் போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயம் நான் விவசாய வேலை செய்து வந்ததாகவோ , விவசாய நிலம் எனக்கு சொந்தமாக இருப்பதாகவோ போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் என் பெரியப்பா அய்யோ , அம்மா என்று கத்தினார் என்றும் , என்ன ஏது என்று பார்க்க நானும் என் சித்தப்பாவும் ஓடினோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒரு முறை குத்தியதற்கு பிறகு 2 வது முறையும் சுரேஷ் பாபு குத்த போகும் போது என் சித்தப்பா கடப்பாரையை பிடித்து கொண்டார் என்றும் , நான் என் பெரியப்பாவை தூக்க குனிந்த போது வெங்கடலட்சுமி கட்டையால் என் தலையில் அடித்தார் என்றும் , நான்போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கீழே விழுந்த பிறகு என் முகத்தின் மீது அன்னையப்பா செருப்பு காலால் உதைத்து என் முகத்தின் மீது கால் வைத்து அழுத்தி பிடித்து கொண்டார் என்ற விவரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. என் பெரியப்பா கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து கிரயம் வாங்கிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தார்கள் அ.,சா 1 கிரயம் வாங்கிய சொத்து சம்மந்தமாக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியும் அ.சா 1 ம் சேர்ந்து ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் , கிருஷ்ணமூர்த்தி கோனேரிப்பள்ளியில் குடியிருக்கிறார் என்றும் சம்பவம் நடந்த நிலம் அமைந்து ள்ள கிராமத்தில் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். கிருஷ்ணம்மா கொத்தூரில் உள்ள சொத்துக்களை எதிரிகள் தான் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் சுவாதினத்தில் உள்ள நிலத்தை எப்படியாவது சுவாதினம் எடுத்து கொள்ள வேண்டும் என்பதற்காக என் பெரியப்பா ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும் நான் சொல்வது போல் எனக்கும் என் பெரியப்பாவிற்கும் காயம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் பெரியப்பாவிற்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

S.C. 32/2023 தேதி 24-04-2025

அ.சா 1 – பசவராஜ்

**மனுவின் பேரில் அ.சா 1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. கிருஷ்ணம்மா கொத்தூரில் இருந்து சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 500 மீட்டர் என்கிறார். ஊருக்கு எந்த திசையில் சம்பவ இடம் உள்ளது என்றால், கிழக்கே உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் நிலம் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் இருந்து விலைக்கு வாங்கியது என்றால் சரிதான். அவ்வாறு விலைக்கு வாங்கிய சொத்திற்கு வடக்கே அப்பையப்பா, மற்றும் வெங்கடேஷ் நிலம் உள்ளது என்றால் சரிதான். கிழக்கே கோவிந்தப்பா திம்மக்கா நிலம் என்றால் சரிதான். மேற்கே கிரயம் கொடுத்த கிருஷ்ணமூர்த்தியின் கைவசச் சொத்து உள்ளது. கிரயம் வாங்கிய நிலத்திற்கு தெற்கே என் நிலம் உள்ளது. கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்திற்கு நான்கு பக்க எல்கையில் எனது அண்ணன் தம்பிகளான அ.சா 2, அசா 3 நிலம் இல்லை என்றால் சரிதான். ஆனால் என் நிலத்திற்கு தெற்கு பக்கம் அவர்களது சொத்து உள்ளது என்கிறார்.

2. அப்பையப்பா , வெங்கடேஷ் நிலத்தை தாண்டி தான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நிலம் உள்ளது என்றால் சரிதான். அப்பையப்பா , வெங்கடேஷ் நிலத்திற்கும் நான் கிரயம் வாங்கிய நிலத்திற்கும் இடையே வரப்பு உள்ளது என்றால் சரிதான். அப்பையப்பா , வெங்கடேஷ் நிலத்தையும் என் நிலத்தையும் இணைக்கும் பாதை எதுவும் கிடையாது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லும் நிலம் தனி நபருக்கு பாத்தியப்பட்டது என்றும் , பொதுஇடம் ( Public Place) இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா .ஆ 1 புகாரில் சம்பவ சமயம் ஒரு டிராக்டரில் நான் பயணம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அந்த டிராக்டர், டிரைலர் பதிவு எண் மற்றும் அவற்றின் உரிமையாளரின் விவரங்களை அ.சா .ஆ 1 புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. டிராக்டரில் எரு எடுத்துச் சென்றதாக சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் , எங்கிருந்து எங்கு எடுத்து செல்கிறேன் என்றும் , எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றேன் என்றும் புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை என்கிறார். டிராக்டரில் உள்ள எரு என்ன ஆனது , டிராக்டர் என்ன ஆனது போன்ற விவரங்களை புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் , சம்பவம் நடந்தவுடன் அந்த இடத்திலேயே விட்டுவிட்டு சென்றதாக சாட்சி சொல்கிறார். கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் இருந்து நான் வாங்கியதாக சொல்லும் நிலமானது ஆதியில் 1 ம் எதிரி குடும்பத்திற்கு பாத்தியமானது என்றால் இருக்கலாம் , ஆனால் அவர் விற்றுவிட்டார் என்கிறார். நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் சொத்தின் மொத்த விஸ்தீரணத்தின் ஒரு பகுதியை நான் 1 ம் எதிரியிடம் இருந்து கிரயம் வாங்கி பின்பு நானும் 1 ம் எதிரி யும் கிருஷ்ணமூர்த்திக்கு மொத்த விஸ்தீரணத்தையும் 2006 ல் விற்றுவிட்டோம் என்றால் சரிதான். அவ்வாறு கிருஷ்ணமூர்த்திக்கு விற்ற மொத்த விஸ்தீரணத்தின் ஒரு பகுதியை நான் 2017 ல் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான்.

4. நான் கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்தை பொறுத்து கிருஷ்ணமூர்த்தியின் சகோதரர் பாகம் கோரி அசல் வழக்கு எண் 261/2014 வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் , நான் கிரயம் வாங்கும் போது அந்த வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும் , தற்போது தான் தெரிய வந்தது என்றும் , சாட்சி சொல்கிறார். மேற்படி அசல் வழக்கில் என்னை 8 ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3 ம் எதிரி வெங்கடலட்சுமி எனக்கு கிரயம் கொடுத்த கிருஷ்மூர்த்தியின் சகோதரி என்றால் சரிதான். கிருஷ்மூர்த்தியும், வெங்கடலட்சுமியும் 3, 4 பிரதிவாதிகளாக அசல் வழக்கு எண் 261/2014 ல் உள்ளார்கள் என்றால் சரிதான்.

5. நான் எனது புகாரில் நான் கிரயம் வாங்கிய பின்பு எதிரிகள் நான் கிரயம் வாங்கிய சொத்தில் தகராறு செய்ததாக சொல்லியுள்ள நிலையில் , எதிரிகள் மீது சட்ட ரீதியாக ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் , இல்லை. நான் கிரயம் வாங்கிய சொத்தில் உரிமை குறித்த ஆவணங்களை எதையும் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து எவ்வாறு ஏற்பட்டது என்று மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். உடலில் எனக்கு எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தையும் மருத்துவரிடம் சொன்னேன். மருத்துவமனையில் நான் சுய நினைவோடு தான் அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் காரில் இருந்து இறங்கும் போது தாக்கப்பட்டு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்னேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை என்கிறார். எனக்கு வலது புஜத்திலும் , வயிற்று பகுதியிலும் , முதுகிலும் காயம் ஏற்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் , மேற்படி காயங்களை மருத்துவரிடம் சொல்லி அவர் எழுதி கொண்டாரா என்றால் ஆமாம்.

6. குணம் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஏதாவது ஆவணங்களை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. லட்சுமி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், நான் குணம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் லட்சுமி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது போலிசார் என்னை விசாரிக்கவில்லை அதனால் அந்த

விவரத்தை நான் சொல்லவில்லை என்றும் சாட்சி சொல்கிறார். லட்சுமி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கனா ஆவணம் ஏதாவது போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட இரத்த காயத்தால் நான் உடுத்தி இருந்த துணியில் இரத்தக்கறை பட்டதா என்றால் பட்டது என்கிறார், இரத்தக்கறை படிந்த ஆடைகளை போலிசார் கைப்பற்றினார்களா அல்லது நான் ஒப்படைத்தேனா என்றால், நான் காயம் பட்டு சிகிச்சையில் இருக்கும் போது அதை நான் எப்படி பார்க்க முடியும் என்றும் , இரத்தக்கறை படிந்த ஆடைகளை மருத்துவமனையில் வைத்திருந்தேன் என்றும் அதை போலிசார் கைப்பற்றினார்களா இல்லையா என்பது எனக்கு தெரியாது என்றும் சாட்சி சொல்கிறார்.

7. நான் டிராக்டரில் எருவை கொண்டு சென்ற போது இந்த வழியாக ஏன் செல்கீறீர்கள் என்று மறித்து மிரட்டியதாக புகாரில் சொல்லியுள்ள நிலையில் , நான் டிராக்டரை விட்டு இறங்கினேனா அல்லது டிராக்டரிலேயே அப்போது இருந்தேனா என்றால் டிராக்டரில் இருந்து இறங்கினேன் என்கிறார். எதிரிகள் என்னை டிராக்டர் உடன் மறித்ததால் நான் கீழே இறங்கிய போது எதிரிகள் தாக்கியதாக நான் என் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை நான் என்னுடைய புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றும் , வழக்கிற்காக சொன்னதாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் நிலத்திற்கு வடக்கே அப்பையப்பா நெட் ஹவுஸ் அமைத்துள்ளார் என்றால் நான் கிரயம் வாங்கிய இடத்திற்கு ஒட்டியது போல் அமைக்கவில்லை என்றும் , வடக்கே தள்ளி , காலி இடம் விட்டு தான் அமைத்துள்ளார் என்றும் , சாட்சி சொல்கிறார். நெட் ஹவுஸில் நிறைய ஆள்கள் வேலை செய்து வந்தார்கள் என்றால் சம்பவம் நடப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பே மூடிதான் கிடக்கிறது என்கிறார். சம்பவம் நடந்த போது சத்தம் கேட்டு யார் யார் வந்தார்கள் , எத்தனை நபர்கள் வந்தார்கள் என்று புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை

என்றால் சரியல்ல. போலிசார் ஒரே ஒரு முறை தான் விசாரித்து எழுதி சென்றார்கள் அதற்கு பிறகு விசாரிக்கவில்லை. காலை சுமார் 10.00 மணியளவில் ஒரு போலிஸ் அதிகாரி புகாரை வாங்கி சென்றார். அவர் பதிவியின் பெயர் எனக்கு தெரியவில்லை.

8. போலிசார் என்னை ஆயுதங்களை அடையாளம் காண்பித்து விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னை தாக்க பயன்படுத்தியதாக ஆயுதங்களின் வடிவம் , உருவம் , ஆகியவற்றை புகாரிலும் , போலிசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்கிறார். நான் சொல்வது போல் ஆயுதங்களை குறிப்பிட்டு அடையாளம் காட்டி போலிசாரிடம் சொல்லவில்லை என்றும் , அவ்வாறு சொன்னதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் ஊரில் இல்லை என்றும் , அவர் இருப்பது கோனேரிப்பபட்டி கிராமம் என்றும், சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் டிராக்டரில் நான் மட்டும் தான் பயணம் செய்தேன் என்னுடன் யாரும் வரவில்லை.

9. எதிரிகள் மூவரும் சம்பவம் நடந்ததாக சொல்லும் நிலம் அமைந்துள்ள கிராமத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் பக்கத்து நிலத்துக்காரர் என்றும் , ஏற்கனவே இந்த நிலத்தை கிரயம் வாங்கியுள்ளேன் எனவும் அதனால் இந்த நிலத்தின் பாத்திய விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு சொத்து எதிரிகளின் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றும் கிருஷ்ணமூர்த்தி கோனேரி கிராமத்தில் இருந்ததால் அந்த சொத்தை அனுபவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு முன்னால் கிருஷ்ணமூர்த்தி அனுபவத்தில் இருந்தது என்றும் அவருக்கு பின்னால் என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் சாட்சி சொல்கிறார்.

10. நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் நிலம் போக மீதமுள்ள சொத்து விவசாயம் செய்யாமல் தரிசாக உள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுத்ததாக சொல்லும் நிலமும் மீதமுள்ள நிலமும் 1 ம் எதிரியின் குடும்பத்திற்கு பாத்தியமான பூர்விக சொத்து என்றும் அந்த சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று தெரிந்தும் நானும் கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் 11.07.2021 ம் தேதி எந்த ஒரு சம்மபமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லிய வகையில் எனக்கு காயம் ஏற்படவும் இல்லை , எதிரிகள் என்னை தாக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தின் சுவாதினத்தை எந்த வகையிலாவது எடுத்து கொள்ள வேண்டும் என்று நானே ஒரு சம்பவத்தை உருவாக்கி அதன் மூலம் இந்த குற்ற வழக்கை உருவாக்கி சொத்தின் சுவாதினத்தை எடுக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

11. அ.சா 2 சூளகிரியில் சிகிச்சை பெற்றதாக சொன்னார்கள் எந்த மருத்துவமனை என்று எனக்கு தெரியவில்லை. நான் எனது அண்ணன் தம்பிகளை வைத்து இந்த குற்ற வழக்கை உருவாக்கியுள்ளேன் என்றும் , சம்பவ சமயம் அ.சா 2, 3 சம்பவத்தின் போது வந்ததாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் உதவியுடன் ஒரு பொய்யான வழக்கை எதிரிகள் மீது தொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur